செ.வெ.எண் : 58 நாள் : 21.09.2019

# பத்திரிக்கை செய்தி

எச்1/24380/2019
நாள்: 21.09.2019

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
விழுப்புரம்.

இந்திய தேர்தல் ஆணையம் விழுப்புரம் மாவட்டம் 75.விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தலை கீழ்குறிப்பிட்டுள்ளவாறு பணி கால அட்டவணை வெளியிட்டுள்ளது.

| | |
|---|---|
| தேர்தல் அறிவிப்பு அறிவிக்கை வெளியிடுதல் மற்றும் வேட்புமனுக்கள் தாக்கல் துவங்கும் நாள் | 23.09.2019 (திங்கள் கிழமை) |
| வேட்பு மனு தாக்கல் செய்ய இறுதி நாள் | 30.09.2019 (திங்கள் கிழமை) |
| வேட்புமனுக்கள் பரிசீலனை செய்தல் | 01.10.2019 (செவ்வாய் கிழமை) |
| வேட்புமனுக்கள் திரும்ப பெறுதல் | 03.10.2019 (வியாழக்கிழமை) |
| வாக்குப்பதிவு நாள் | 21.10.2019 (திங்கள் கிழமை |
| வாக்கு எண்ணிக்கை நாள் | 24.10.2019 (வியாழக்கிழமை) |

75.விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது தொடர்பாக தேர்தல் நன்னடத்தை விதிகள் 21.09.2019 முதல் விழுப்புரம் மாவட்டம் முழுவதும் நடைமுறைக்கு வருவதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

75.விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு தேர்தல் நடத்தும் அலுவலராக மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் திரு. மு.சந்திரசேகர் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். விக்கிரவாண்டி இடைத்தேர்தல் தொடர்பாக விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் அலுவலரிடம் வேட்பு மனுக்களை வேட்பாளர்கள் தாக்கல் செய்யலாம்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்திரவின்படி விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கும் உட்பட்ட பகுதிகளில் தேர்தல் விதிமீறல்களை கண்டறிவதற்காக ஒரு சட்டமன்ற தொகுதிக்கு 3 குழுக்கள் வீதம் மொத்தம் 11 சட்டமன்ற தொகுதிகளுக்கும் 33 பறக்கும்படை (Flying Squad) மற்றும் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு மட்டும் கூடுதலாக 2 பறக்கும் படைகளும், மற்றும் 33 நிலையான கண்காணிப்பு குழு (Static Surveillance Team) மற்றும் விக்கிரவாண்டி தொகுதிக்கு மட்டும் கூடுதலாக 2 நிலையான கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.